காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம் ஊராட்சியில் நேற்று (22.01.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாவட்டச் செயலாளர் – உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், வாலாஜாபாத் ஒன்றிய குழுத் துணைதலைவர் பி.சேகர் ஆகியோர் உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் – வாலாஜாபாத் வட்டம்

கட்டவாக்கம் ஊராட்சியில் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்!

அமைச்சர்கள் ஆர்.காந்தி - சி.வி.கணேசன் - க.சுந்தர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜன.23- காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் முன்னிலையில் வீட்டு மனைப் பட்டா பெற்ற திருமதி.புஷ்பா "நிறைந்தது மனம்" திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம் ஊராட்சியில் நேற்று (22.01.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் முன்னிலையில் வீட்டுமனைப் பட்டா பெற்ற திருமதி.புஷ்பா "நிறைந்தது மனம்" திட்டத்தின்கீழ் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் ஊரக பகுதியில் அரசு துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக நகர்ப்புறங்களில் மாநகராட்சியில் 8 முகாம்கள், நகராட்சியில் 4 முகாம்கள், பேரூராட்சியில் 3 முகாம்கள், நகர்ப்புறத்தினை ஒட்டியுள்ள கிராம பஞ்சாயத்துகளில் 15 முகாம்கள் ஆக மொத்தம் 30 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டது. மேலும், இரண்டாம் கட்டமாக 11.07.2024 முதல் 27.08.2024 வரை 256 கிராம ஊராட்சிகளில் 54 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டது.

மேற்படி முதற்கட்டமாக 30 முகாம்களிலும் மற்றும் இரண்டாம் கட்டமாக 54 முகாம்களிலும் நடத்தி முடிக்கப்பட்ட மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட 34275 மனுக்களில், 25140 மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டு, 93% மாநில அளவில் தரமான முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் மூன்றாம் கட்டமாக 20 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, இன்று வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம், தென்னேரி, வாரணவாசி, ஊத்துக்காடு, பழையசீவரம் ஆகிய ஊராட்சிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று, குறைகளை கேட்டறிந்து, இலவச வீட்டு மனைப் பட்டா நகல் - 85 பயனாளிகளுக்கும், குடும்ப அட்டை - 16 பயனாளிகளுக்கும், மகளிர் சுயஉத விக்கடன் - 23 பயனாளிகளுக்கும், ஊட்டச்சத்து பெட்டகம் - 24 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்புத்திட்டன் கீழ் நலத்திட்ட உதவிகள் - 5 பயனாளிகளுக்கும், தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறை மூலம் - 7 பயனாளிகளுக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம்- 5 பயனாளிகளுக்கும், முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை - 4 பயனாளிகளுக்கும், தையல் இயந்திரம் - 5 பயனாளிகளுக்கும், சலவைப் பெட்டி 2 பயனாளிகளுக்கும் என மொத்தம் 176 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, முகாமினை பார்வையிட்டனர். முகாம்களில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக சுமார் 2000 மனுக்கள் பெறப்பட்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 165 மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டு பயணாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் வீட்டு மனைப் பட்டா பெற்ற திருமதி.புஷ்பா கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் "நிறைந்தது மனம்" திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், சார் ஆட்சியர் ஆஷிக் அலி, வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், வாலாஜாபாத் ஒன்றிய குழுத் துணை தலைவர் பி.சேகர், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

ப.குணாளன் - என்.சந்திரன் - டி.பாபு -ஜி.கே.ரவி முன்னிலை! ஆலந்தூர் வடக்கு தெற்கு

கண்டோன்மெண்ட் நகர - புனித தோமையர் மலை வடக்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை!

சென்னை, ஜன.23 காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க ஆலந்தூர் வடக்கு தெற்கு பகுதி கண்டோன்மெண்ட் நகர புனித தோமையர் மலை வடக்கு ஒன்றிய

செயல்வீரர்கள் கூட்டம் இன்று (23.01.2025 வியாழக் கிழமை) காலை 9 மணிக்கு மாவட்ட கழக அலுவலகம், கத்திப்பாரா அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி செயலாளர்கள் ப. குணாளன், என். சந்திரன் எம்.சி., நகரச் செயலாளர் டி.பாபு, ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை யாற்றுகிறார்.

பொருள்: 25 ஆம் தேதி பல்லாவரத்தில் நடைபெற விருக்கும் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு கழக தலைவர், முதலமைச்சர் அவர்கள் வருகை குறித்து.

எனவே ஆலந்தூர் வடக்கு தெற்கு பகுதி கண்டோன்மெண்ட் நகர புனித தோமையர் மலை வடக்கு ஒன்றிய செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒலி ஒளி ஆ.பாபு தலைமை ! இரா.செந்தில்குமார் முன்னிலை !

சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் ஆர்.எம்.டி.ரவீந்திரன் நினைவு நாள்! நலஉதவிகள் !

கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, தா.இளையஅருணா பங்கேற்பு!

சென்னை ஜன.23 சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பாக மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.எம்.டி.ரவீந்திரன் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு (21.1.25 செவ்வாய்க்கிழமை) காலை அவரது இல்லம் அருகில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒலி ஒளி.ஆ.பாபு தலைமையில் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், சி.மணிகண்டன், பி.ரவிசங்கர், எம்.லோகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி,ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, தா.இளையஅருணா எம்.சி ஆகியோர் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் பி.டி.பாண்டி செல்வம், ந.மனோகரன், என்.மருதுகணேஷ், மு. கோபி, நாகம்மை கருப்பையா, நா.சண்முகம், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன், லயோலா கே.மதன், கார்த்திக் செங்குட்டுவன், பி.செந்தில்குமார் என்.பார்த்திபன், கு.சுந்தர், கு.ரமேஷ் க. கோவிந்தராஜ், பி.கண்ணன் எஸ்.மணிகண்டன், வி. கே.ராஜ், எல்.சீனிவாசன், நெல்லை.எம்.எம். சாமி, எஸ்.யுவராஜ், எஸ்.சௌந்தரபாண்டியன், கே.சி.பிரதாபன், பிரேம் விஸ்வநாதன், ஜூலியன், மற்றும் அவரது குடும்பத்தினர் திரளாக கலந்து கொண்டனர் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, கிளை கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை ஒலி ஒளி.ஆ.பாபு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்.

எல்.கிருஷ்ணஹரிஹரன் நன்றி கூறினார்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், கட்டேரி காளியம்மன் கோவில் வளாகத்தில் மயிலார் பண்டிகை முன்னிட்டு நடைபெற்ற காய்கறிகள் தொகுப்பு வழங்கும் விழாவில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் க.தேவராஜி MLA கலந்துகொண்டு பொதுமக்களுக்கு காய்கறிகள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி சிறப்பித்தார். மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா, ஊர் கவுண்டர் ஜெகன் ஆகியோர் நிகழச்சி ஏற்பாடு செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, மாவட்ட பிரதிநிதி மோகன், மாவட்ட அணிகளின் து.அமைப்பாளர்கள் மோகன், நபியுல்லா மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

சென்னை தீவுத் திடலில் 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். இராஜேந்திரன் , சுற்றுலாத்துறை மற்றும் அரசு சார்பாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து துறை அரங்குகளையும், தனியார் துறையால் அமைக்கபட்ட பொழுதுபோக்கு தளங்களையும் பார்வையிட்டுள்ளனர். உடன் மேலாளர் (பொருட்காட்சி) மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இதுவரை 1, 46, 377 நபர்கள் பார்வையிட்டனர்!

சென்னை தீவுத்திடலில் சுற்றுலாப் பொருட்காட்சி!

அமைச்சர் .இரா. இராஜேந்திரன் ஆய்வு!

சென்னை, ஜன. 23 - சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அனைவரும் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு "திட்டங்களின் செயல் மாதிரிகளுடன் அரசு துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்பட பல்வேறு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் 41 அரங்குகளுடன், ஒன்றிய அரசின் சென்னை துறைமுகம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அரங்குகள் உள்பட மொத்தம் 43 அரங்குகள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49 -வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

21.1.2025 வரை இப்பொருட்காட்சியினை 1,20,253 பெரியவர்கள் மற்றும் 26,124 குழந்தைகள் என மொத்தம் 1,46,377 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள்.

இப்பொருட்காட்சியில் 110 சிறிய கடைகள் மற்றும் 30 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் ஆவின் பால்கோவா, ஆவின் ஐஸ்கிரீம் உள்பட பல்வேறு திண்பண்டங்கள் இந்த பொருட்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், 80,000 சதுர அடி பரப்பளவில் பொழுது போக்கு வளாகம் அமைக்கப்பட்டு அதில் 30 க்கும் மேற்பட்ட இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இரயில், பனிக்கட்டி உலகம், அவதார் உலகம், மென் காட்சியகம், மிரளவைக்கும் பேய் வீடு, 3D தியேட்டர், அறிவியல் உலகம் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திங்கள் முதல் வெள்ளிக் கிழமை வரை அலுவலக நாட்களில் மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும், பொருட்காட்சி நுழைவுச்சீட்டினை வரிசையில் நின்று வாங்க முடியாதவர்களுக்கு வசதியாக டிஜிட்டல் தொழில் நுட்பம் "UPI Payment Methods" மூலம் பணம் செலுத்தி எளிதில் நுழைவுச் சீட்டினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலைமை ஜி. சுந்தர்ராஜன்! என்.சந்திரன் வரவேற்புரை!

காஞ்சிபுரம் வடக்கு தெற்கு செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி.– ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

சென்னை,ஜன.23 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் இன்று (23.1.2025 வியாழக் கிழமை) காலை 9 மணிக்கு மாவட்ட அலுவலகம் ஜோதி திரையரங்கம் ஆலந்தூரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு ஆலந்தூர் தெற்கு பகுதி அவைத் தலைவர் ஜி. சுந்தர்ராஜன் தலைமை வகிக்கிறார். தெற்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என். சந்திரன் வரவேற்புரையாற்றுகிறார். தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே. இப்ராஹிம், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி. சாய் ஜெயகாந்த், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ஆர் ஜெயராம் மார்த்தாண்டன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கே ஆர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்திற்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி ஆர் பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் ஆர். பாபு, ஏ.சாலமோன் எம்.சி., கே.ராஜேஸ்வரி சத்யா, இ. ரமேஷ் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள்

துணை அமைப்பாளர்கள் கழக முத்த முன்னோடிகள், BLA2, பாகமுகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்கின்றனர்.

பகுதி இளைஞரணி அமைப்பாளர் எம். விக்னேஷ் நன்றியுரை ஆற்றுகிறார்.

க.ஜெயராமன் முன்னிலை! மு.ரவி தலைமை!

45வது வட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஜி.மாரிமுத்து அறிக்கை!

சென்னை, ஜன .23 45வது வட்ட செயலாளர் ஜி.மாரிமுத்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 45வது வட்ட திமுக சார்பில் வட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று (23.1.2025- வியாழக் கிழமை) மாலை 5.00 மணியளவில் சுப்ரமணிய சுவாமி ஆன்மீக திருமண மண்டபத்தில் பகுதி செயலாளர் க.ஜெயராமன் முன்னிலையில் வட்ட அவைத் தலைவர் மு.ரவி தலைமையில் 45வது வட்ட கழக செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு 45வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், (BLA 2) சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் - ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்

கழக இளைஞரணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் ஆவடி சாமு.நாசர் அறிவிப்பு!

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நாளை 24.01.2025 வெள்ளிக்கிழமை காலை 8:30 மணிக்கு, பட்டாபிராம் தண்டரை பகுதியில் உள்ள ஜெய கிரிஸ் திருமண மண்டபத்தில் , சிறுபான்மையினர் நலன் (ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எனது தலைமையில் நடைபெறுகிறது இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி மா.செ.ராஜேஷ், தெ.பிரியாகுமார், ஆவடி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இள.ஸ்ரீதர், எஸ்.எஸ். முஸ்தபா அஃப்ரிடி, ஜி.சதீஷ் குமார், மகா.புவனேஷ், ரங்கநாதன் மகேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் இந்நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், ப. அப்துல் மாலிக், மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள் அது சமயம் மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம். முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி. உதயகுமார் , பேபி சேகர் , ஜி.நாராயண பிரசாந்த், பொன் விஜயன், ஆசிம் ராஜா, டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், செ.பிரேம் ஆனந்த், என்.இ.கே. மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நிறைவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் நன்றி உரைஆற்றுகிறார். எனவே ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் அறிமுக கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்..

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.